www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

R

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி சமூக அறிவியல் மதிப்பெண்கள்:100

I. சரியான விடையை தேர்ந்து எழுதுக. 14×1=14

1) ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்' எனக் கூறியவர் யார்?

அ) லெனின் ஆ) மார்க்ஸ்

இ) சன்யாட் சென் ஈ) மாசேதுங்

2) பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன் முயற்சி எடுத்தவர் யார்?

அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின்

இ) உட்ரோவில்சன் ஈ) பால்டுவின்

3) எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?

அ) 1827 ஆ) 1829

இ) 1826 ஈ) 1927

4) கூற்று: பிரிட்டிஷ் அரசு 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.

காரணம்: மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.

ஆ) கூற்று தவறு காரணம் சரி.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

5) இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது.

அ) ஈரோடு ஆ) சென்னை

இ) சேலம் ஈ) மதுரை

6) பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு.

அ) நர்மதா ஆ) கோதாவரி

இ) கோசி ஈ) தாமோதர்

7) பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் ஆ) இலையுதிர்க் காடுகள்

இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக் காடுகள்

8) சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக் கருவாக இருப்பது

அ) போக்குவரத்து ஆ) கனிமப்படிவுகள்

இ) பெரும் சேவை ஈ) மின்சக்தி சக்தி கிடைப்பது

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

R



9) தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம் ______
அ) மேட்டூர் ஆ) பாபநாசம்
இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா

10) கூற்று: தமிழ்நாடு தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை.
காரணம்: இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
அ) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்குவதில்லை.
இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

11) எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசர நிலையை அறிவிக்க முடியும்?
அ) சட்ட பிரிவு 352 ஆ) சட்ட பிரிவு 356
இ) சட்ட பிரிவு 360 ஈ) சட்ட பிரிவு 368

12) ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை?
அ) முதலமைச்சர் ஆ) அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் தலைவர்
இ) மாநில தலைமை வழக்குரைஞர் ஈ) உயர் நீதிமன்ற நீதிபதிகள்

13) இந்திய அரசாங்கத்தால் 1991 இல் ______ஐ அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) உலகமயமாக்கல் ஆ) உலக வர்த்தக அமைப்பு
இ) புதிய பொருளாதார கொள்கை ஈ) இவற்றில் எதுவுமில்லை

14) ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?
அ) மதிப்பு கூட்டு வரி (VAT) ஆ) வருமான வரி
இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ஈ) விற்பனை வரி.

## பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண். 28 கட்டாய வினா) 10×2=20

15) 'டாலர் ஏகாதிபத்தியம்' - தெளிவுபட விளக்குக.
16) முத்து துறைமுக நிகழ்வை விவரி?
17) பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத்தீமைகள் யாவை?
18) ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப் பெற்றார்?
19) திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
20) பருவக் காற்று குறித்து ஒரு சிறு குறிப்பு வரைக.
21) இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.
22) இடம் பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
23) பேரிடர் அபாய நேர்வு - வரையறு.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com